Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தொலைபேசி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 258

யாழ்ப்பாணம் ஐப்பசி 11 ரமழான் 8 வியாழக்கிழமை (28-10-71)

குறைந்த செலவில்
சிறந்த சேவை

கொழும்பு ஒப்ரிக்கல்
95, ஸ்ரான்லி ரோட் - யாழ்ப்பாணம்
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்-மேல் மாடி)

யாழ். நல்லூர்த் தொகுதிப் பாடசாலைகளுக்கு

விரும்பினால் நாளை விடுமுறை!

முத்திரை வெளியீட்டு ஏற்பாடு

நல்லூர் எம்.பி.யின் யோசனை வித்தியாதிபதி சம்மதம்

யாழ்ப்பாணம், வியாழன்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டையொட்டி யாழ்ப்பாணம் நல்லூர் தொகுதிகளிலிருந்து இவ் விழாவில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் நாளை விடுமுறை விடலாம் என வடமாநில கல்வி அதிகாரி தமக்கு தெரிவித்ததாக நல்லூர் எம். பி. திரு சி. அருளம்பலம் நேற்றுத் தெரிவித்தார்.

நல்லூர் தொகுதியில் முத்திரை வெளியீட்டு வைபவம் இடம்பெறுவதாலும் யாழ்ப்பாணத் தொகுதியில் நாவலரின் சைவப் பாடசாலை இடம் பெறுவதாலும் இரு தொகுதிகளிலுமுள்ள பாடசாலைப் பிள்ளைகள் இவ்விழாவில் கலந்துகொள்ள வசதியாக பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கும்படி நல்லூர் எம். பி. வடமாநில கல்வி அதிகாரியை கேட்டிருந்தார் இதற்கு கல்வி அதிகாரி சம்மதம் தெரிவித்துள்ளார் என நல்லூர் எம். பி. கூறினார்.

இவ் விழாவில் பாடசாலைப் பிள்ளைகள் பங்குபற்ற விரும்பினால் அப் பாடசாலை தலைமை ஆசிரியர் அதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து அன்றைய தினத்தை விடுமுறைதினமாக்கலாமென்றும் கூறப்பட்டுள்ளது.

நாவலர் முத்திரை வெளியீட்டுத்தினத்தை விடுமுறை தினமாக்கும்படி, நாவலர் சபை செயலாளர் திரு:ஸ்ரீ காந்தா தபாலமைச்சர் திரு செ. குமாரசூரியர் மூலம் கல்வியமைச்சரிடம் வேண்டியிருந்தார். இத்தினத்தை விடுமுறை தினமாக்கும்படி சைவபரிபாலன சபையும், கல்வி அமைச்சரிடம் கோரியிருந்தது.

இன்று அமைச்சருக்கு பூநகரியில் வரவேற்பு

பூநகரி, வியாழன்

தபாலமைச்சர் திரு செல்லையா குமாரசூரியருக்கு பூநகரி காரியாதிகாரிப் பிரிவு பொதுமக்களால் இன்றுமாலை பொது வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

பூநகரி வாடியடித் திறந்த வெளியரங்கில் பூநகரிக் கிராமசபைத் தலைவர் திரு வை. வல்லிபுரம் தலைமையில் இவ்வரவேற்பு விழா ஆரம்பமாகும்.

கிளிநொச்சி எம். பி, திரு வி. ஆனந்தசங்கரி, பல்லவராயன்கட்டு கிராமசபை தலைவர் திரு இ. இரத்தினம் இரணைதீவு கிராமசபைத் தலைவர் திரு அ. சந்தியா, பூநகரி காரியாதிகாரி திரு செ. கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் உரையாற்றுவார்கள்.

பூநகரி வேரவில் கிராமசபை உறுப்பினரும் காரியாதிகாரி கந்தோர் ஊழியரும் தபால்கந்தோர் ஊழியரும் அமைச்சருக்கு வரவேற்பு அளிக்கவிருக்கின்றனர்.

இன்று மாலை 5 மணிக்கு அமைச்சர் மாதேவா பாலத்தை பார்வையிடுவார் மாலை 6 மணிக்கு பூநகரி தபால் கந்தோரிலிருந்து அமைச்சர் ஊர்வலமாக வாடியடிக்கு அழைத்துச் செல்லப்படுவார். இரவு 7 மணிக்கு பொது வரவேற்பு அளிக்கப்படும்.

நாவலர்.கலாயோகி

ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், வியா.

நல்லூர் கோவில் அஞ்சல் அலுவலகத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரை கௌரவிக்கும் முகமாக ஞாபகார்த்த முத்திரையும் மானிப்பாய் அஞ்சல் அலுவலகத்தில் ஆனந்தகுமார சுவாமியை கௌரவிக்குமுகமாக ஞாபகார்த்த முத்திரையும் நாளை காலை வெளியிடப்படவிருக்கிறது.

நாளை காலை 8-30 மணிக்கு தபால் அமைச்சர் திரு.செ. குமாரசூரியர், நல்லூர் எம் பி. திரு. சி. அருளம்பலம், அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகர, மேயர் திரு. அல்பிரட் துரையப்பா ஆகியோர் நல்லூர் கந்தசாமி கோவிலை வந்தடைவார்கள். காலை 8-35 மணிக்கு கோவிலில் விசேட பூசை நடைபெறும். காலை 8-50 மணிக்கு அமைச்சர், அரசாங்க அதிபர், யாழ் மேயர், நல்லூர் எம். பி. ஆகியோர் நாவலர் சபையார், நாவலர் நிலையத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்கள். நாவலர் சிலைக்கு மாலை சூட்டுவார்கள்.

காலை 8-55 மணிக்கு நல்லூர் எம் பி திரு. சி. அருளம் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகும். நல்லூர் எம். பி, நாவலர் சபைத் தலைவர் திரு. வி. சிவசுப்பிரமணியம், அரசாங்க அதிபர் யாழ். மேயர் திரு அல்பிரட் துரையப்பா, தபால் அமைச்சர் திரு செ குமாரசூரியர் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள்.

யாழ்ப்பாண அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பால [illegible] வாயிலுதலில்

(6-ம் பக்கம் பார்க்க)

'சைவப் பாடசாலைகளுக்கு விடுமுறையளிக்க வேண்டும்'

சைவபரிபாலனசபை தீர்மானம்

கோட்டை, வியா

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கலாயோகி ஆனந்தகுமார சுவாமி ஆகியோரைக் கௌரவிக்குமுகமாக முத்திரை வெளியிடப்படும் தினத்தில் சகல சைவப் பாடசாலைகளுக்கும் விடுமுறை தினமாக அறிவிக்கப்படவேண்டும் என்று யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் வருடாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத் தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; இது விஷயமாக கல்விமந்திரி தபால் மந்திரி தமிழ் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு தந்தி அனுப்ப வேண்டும். வடமாநில கல்வி அதிகாரியைத் தூதுக்குழுவொன்று சந்தித்து விடுமுறை தினமாக்க வற்புறுத்தவேண்டும்;

கீழ்க்காணும் தீர்மானங்களும் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன, பெரும்பான்மை சைவப் பிள்ளைகள் பயிலும் பாடசாலைகளில் சைவ அதிபர்களையே கட்டாயமாக நியமிக்க வேண்டும்.

சைவத்தொண்டும் தமிழ்த் தொண்டும் புரிந்த சேர் பொன் இராமநாதனுக்கு பெருவிழா எடுக்க வேண்டும்.

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 63 நாயன்மார்களுடைய குருபூசைகளும் நடாத்த வேண்டும்.

புன்னகையே சூ.வின் பதில்

ஹொங்கொங், ஒக் 27

ஐ. நா.வில் நவசீனாவுக்கு அங்கத்துவம் கிடைத்ததையும் தவசீனாவிலிருந்து தைவான் வெளியேற்றப்பட்டதையும் குறித்து சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை. ஒருவிருந்துபசாரத்தில் கலந்து கொண்ட சீனப்பிரதமர் ஆனந்தமாகச் சிரித்துக் கொண்டும் கரகோஷம் செய்து கொண்டும் இருக்கக் காணப்பட்டாராம். 'ஐ. நா.க்கு எப்போது உங்கள் பிரதிநிதிகள் குழுவை அனுப்பப் போகிறீர்கள்?' என்று ஒரு நிருபர் கேட்டதற்கு திரு. சூ-என்-லாய் புன்னகை மட்டும் புரிந்தார்.

சீன வெளிவிவகார அமைச்சரிடம் கேட்டதற்கு 'பிரதிநிதிகள் குழுவை அனுப்புவதுபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்' என்று கூறினார்.

சிரமதானம்

கேதீஸ்வரம், புதன்

மன்னார்ப்பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இளைஞர் முன்னணியினர் [சிரமதானப் பணிமூலம் 'முதலியார் குளத்தைச் சீர்திருத்தினர். மேலும் ஒரு வாரத்திற்கு ஒரு சிரமதானப்பணி என அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

பொலிஸ் அதிபர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வியா

நாவலர் நினைவு முத்திரை வெளியீட்டுவிழாச் சமயத்தில் கறுப்புக்கொடி பிடிக்கவும் சுலோக அட்டைகள் பிடிக்கவும் சில சக்திகள் திட்டமிட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் இத்தகைய செயல்களில் ஈடுபட எத்தனிப்பவர்களைக் கைதுசெய்து காவலில் வைக்குமாறும் வடபகுதியிலுள்ள உதவிப் பொலிஸ் அதிகாரிகளையும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளையும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கேட்டிருக்கிறார். இச்செயலைத் தூண்டிவிடும் சக்திகள் மீதும் கவனமாக இருக்கும்படியும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் எச்சரித்திருக்கிறார்.

பேசாலை, புதன்

முருங்கன் கிறிஸ்து இராசா ஆலய வருடாந்தத் திருநாள் இன்று ஆரம்பமாகிறது. தொடர்ந்து விழா நடைபெற்று 31ந் திகதி ஞாயிற்றுக் காலை பாட்டுப்பூசை, திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் ஆகியவற்றுடன் முடிவுறும்.

வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெசின் கொம்பனி 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

விற்பனைக்கு

மயிலைமார்க் சந்தனப்பவுடர், நறுமணம் மிக்க சுத்த சந்தனப்பவுடர், உயர் தர சந்தனக் கட்டைகளிலிருந்து யந்திரங்களினால் தயாரிக்கப்பட்டது. கோயில்களிலும், விழாக்களிலும் தினசரி பாவிக்கவும் உகந்தது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி யாழ்ப்பாணம். 3624

தேவை

சேப் செய்வதில் அனுபவம் வாய்ந்தவர் ஒருவர் தேவை அனுபவத்திற்குரிய சான்றிதழ்களுடன், பெற விரும்பும் சம்பளத்தையும் குறிப்பிட்டு 31-10-71க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3681 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 3681

M. G. M. குரக்கன்மா, கடலைமா, ஆட்டாமா, உழுந்துமா, கோப்பித்தூள், மஞ்சள் தூள் ஆகியவை எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒதிப்பு- வியாபாரிகளுக்கு விஷேச சலுகை உண்டு: முகமதி கிரைண்டிங் மில்ஸ், 443, கே. கே. எஸ். றோட் யாழ்ப்பாணம். 3675

தேவை

கைத்தறியில் நெசவு செய்ய அனுபவமுள்ள பெண்கள் தேவை: டொபியில் வேலை செய்யக் கூடியவர்கள் விரும்பத்தக்கது. க. வசந்தபுரம் கிக்கிஸ், 7, 2ம் ஒழுங்கை, பிரவுண் வீதி யாழ்ப்பாணம். 3639

விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு கும்பளாவளை பிள்ளையார் கோவில்வீதி தெற்குபுறமாக 6 1/2 பரப்பு காணி மா, பலா, தென்னை ஆகிய பிரயோசனங்களுடனும் கிணற்றுடனும் விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கு சிறந்தது. தரக்கூடிய விலை விபரங்களுடன் தொடர்பு கொள்க. விளம்பர இல. 3684, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3684

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்,
ஜெய்சங்கர் — விஜயலலிதா
நடித்த
நூற்றுக்கு நூறு

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார் ஜானகி
(இருவேடங்களில்)
ரவிச்சந்திரன் - எம். ஆர். ஆர். வாசு
நடித்த
காவியத்தலைவி

தமிழ் நாட்டில் 58 வாரங்களும், ஈழத்தின் தலைநகர் கொழும்பில் 275 நாட்களும் தொடர்ச்சியாக காட்சியளித்து பெரும் சாதனையை நிலைநாட்டி
இப்பொழுது யாழ். மக்களுக்கு விருந்தளிக்கின்றது

லிடோ [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
ஆராதனா
(ஈஸ்ட்மன்கலர் சித்திரம்)
ராஜேஷ்கன்னா ✶ ஷர்மிளா தாகூர்
சுஜித்குமார் ★ பரீடா ஜலால்
நடித்தது.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்.

இன்று மட்டும்
அக்கா தங்கை

நாளை முதல்
★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
★ நாகேஷ்
✶ அசோகன்
✶ ஷீலா
நடித்த
மூன்றெழுத்து
(ஈஸ்ட்மன் கலர்)

உதைபந்தாட்டம்

சென். பற்றிக்ஸ் மத்தியகல்லூரியை வென்றது

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், சென். பற்றிக்ஸ் இரு பிரிவுகளில் வெற்றி பெற்றது.

மேற்படி இரு கல்லூரிகளுக்குமிடையில் நடைபெற்ற "ஏ" பிரிவுப்போட்டி மிகச் சுவையாகக் காணப்பட்டது. ஆட்டம் தொடங்கி பத்து நிமிடங்களின் பின் மத்திய கல்லூரியின் இடதுகரை முன்னணி வீரர் அமிர்தநாயகம் ஒருகோலைப் போட்டார். இதன்பின் ஆட்டம் மேலும் சிறப்புற்று விளங்கியது. இடைவேளை வரை சென். பற்றிக்ஸ் கோஷ்டியினர் கோல்கள் எதையும் போட முடியாத நிலையில் இருந்தனர்.

இடைவேளையின்பின் ஆட்டம் முடிவடைவதற்கு 15 நிமிடங்கள் இருக்கும்போது சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் மத்திய பின்னணி வீரர் பிரான்ஸிஸ் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டார். இக்கோஷ்டியின் வலது முன்னணி வீரர் அருள்நேஸ்வரன் மூன்றாவது கோலைப் போட்டார்.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வீரர்கள் பலதடவைகள் கோல்கள் போட எடுத்த முயற்சிகளை, மத்திய கல்லூரியின் கோல்காப்பு வீரர் சுப்பிரமணியம் மிக இலகுவாக முறியடித்தார். ஆட்டமுடிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 3—1 கோல்களால் மத்திய கல்லூரியை வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. மார்ட்டின் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இந்த இரு கல்லூரிகளின் "பி" பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டியில் மத்திய கல்லூரி வீரர்களின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. இவர்கள் பல கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டனர். ஆட்டமுடிவில் இரு கோஷ்டிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தனர்.

இப்போட்டிக்கு திரு. என். தேவபாலசுந்தரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

"ஸி" பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற போட்டியில் சென். பற்றிக்ஸ் கோஷ்டி 3-0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிகள் அனைத்தும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. (தே நி)

உதைபந்தாட்டம்

திருநெல்வேலி, புதன் யாழ். பாடசாலை உதைபந்தாட்டச் சங்கப் பாடசாலைகளிடையே நடாத்தி வரும் உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் மோதிக் கொண்டன.

மூன்றும் பிரிவினருக்கிடையே நடைபெற்ற போட்டியில் ஸ்கந்தவரோதயா கல்லூரி 3—0 கோல்களால் யாழ். இந்துக் கல்லூரியை தோற்கடித்துள்ளது.

இரண்டாம் பிரிவினருக்கிடையே நடைபெற்ற போட்டியில் ஆட்டம் தொடங்கி முடியும்வரை இரு கோஷ்டியினரும் உற்சாகமாக விளையாடினர். இறுதியாக 2—0 கோல்களால் இந்துக் கல்லூரி வெற்றியீட்டியது.

வெல்லிசினிமா
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 10-00
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
பெற்றால்தான் பிள்ளையா

இன்று மட்டும்
ராஜா
(யாழ்ப்பாணம்)
(தினசரி 4காட்சிகள்)
சாரதா
நடித்த
துலாபாரம்

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி: 4-30
சனி, ஞாயிறு: 10-30
AMERICA BY NIGHT

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஐந்து லட்சம்

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p.m.
Sat-Sundays 10-30 a.m,
Kerwin Mathews,
Pier Angeli
in
OSS 117
PANIC IN BANGKOK
(Cinemascope-Color)

தினசரி பி. ப. 2-00, 10-00
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
புதியபூமி
(புதிய கொப்பி)

MANOHARA
Jaffna
Daily 4-45, 7, &
9-45 p. m.
Sat. Sundays 10-30 a. m.
Norman Wisdom
in
WHAT IS GOOD
FOR GOOSE
(Is a best comedy Film)

கொக்குவில் கி. ச. உப-தலைவர்

யாழ்ப்பாணம், வியாழன் கொக்குவில் கிராமச்சபை 7ம் வட்டார உறுப்பினர் திரு. த. அந்தோனிப்பிள்ளை சபையின் உப-தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் முன்னைய யூனியன் கிளப் தலைவரும், கொக்குவில் மேற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமாவார். உரம்புலம் ஆனைக்கோட்டை நாட்டுக்கூத்து, நாடகக் குழுத் தலைவராகவும், "கண்டி அரசன்" நாட்டுக் கூத்து இயக்குநராகவும் இருந்து மக்களின் பாராட்டைப் பெற்றனர். (தே.நி)

வேலணை, புதன் மின் இணைப்புச் செய்து கொள்ளக்கூடிய வசதியுள்ள வீடுகளை அதிகமாயுள்ள வீதிகளில் மின்கம்பி இணைப்பு மேற்கொள்ளுமாறு வேலணைப் பகுதிப் பொது ஸ்தாபனங்கள் மின்சார சபையிடம் கேட்டுள்ளன.

பனைமரத்திலும் தரையிலும் பழங்களிருப்பதான லேபலைக் கொண்ட
பனம்பழ ரசம்
பனம்பழ ஜாம்
தயாரிக்கப்பட்டு விற்பனையாகிக்கொண்டிருக்கிறது. யாழ். நகரிலுள்ள பிரபல்யமான கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
தயாரிப்பு - விநியோகம்:
T.V. சுப்பிரமணியம் & சன்ஸ்
யாழ். சம்பியன்
சிறுகைத்தொழிலகம்
மானிப்பாய்.
3094

நன்றி நவிலல்

எனது அன்புக் கணவரும், எமதருமைத் தந்தையாரும், எமதருமைச் சகோதரருமாகிய கலைவாணி கு. வி. தம்பித்துரை ஜே. பி. அவர்கள் 9-10-71-ல் இயற்கை எய்தியமையறிந்து நேரில் வந்து அஞ்சலி செலுத்தியும், தொலைபேசி, தந்தி, தபால் என்பவற்றின் மூலம் எமக்கு அனுதாபம் தெரிவித்தும், மலர் வளையங்கள் அனுப்பியும் எமது ஆழ்ந்த துக்கத்தில் பங்கு கொண்டு ஆறுதல் அளித்த அனைவர்க்கும் எங்கள் உளங்கலந்த நன்றியையும், கடப்பாட்டையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருமதி த. புஷ்பமணியும்,
பிள்ளைகளும்.

கு. வி. செல்வத்துரையும்,
சகோதரர்களும். 3093

மரவள்ளிக்கிழங்கு

ஒரு தொன் ரூபா 200-00 வீதம் கொள்வனவு செய்துவருகிறோம்.

தொடர்பு கொள்ளவும்:
ஸ்ரீலங்கா டப்பியோகா புறடக்ஸ்
C/O சுந்தரம் பிறதர்ஸ்,
73, மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணம்.

தீயசக்திகளுக்கு ஐ. நா. பலியாகிவிட்டதாம்

ஷியாங்கேஷேக் கவலை

உலகமக்களுக்கு வெற்றி என்கிறார் பீகிங் மந்திரி

நியூயோர்க், ஒக் 27

தீயசக்திகளுக்கு ஐ. நா. பலியாகிவிட்டது என்று தைவான் அதிபர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

ஐ. நா.வில் மக்கள் சீனாவுக்கு இடம் கிடைத்தது உலகமக்களுக்கு கிடைத்தவொரு வெற்றியாகும் என்று கம்யூனிஸ்ட் சீனக் குடியரசின் பதில் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் பொதுச் சபையில் சீனமக்கள் குடியரசை அங்கத்துவநாடாகச் சேர்த்துக் கொண்டது பற்றியும் இதுவரைகாலமும் முழு இராஜதந்திர அதிகாரத்துடன் உறுப்பு நாடாக இருந்த தைவானை ஐ. நா.விலிருந்து வெளியேற்றியது பற்றியும் உலகின் பல பாகங்களிலிருந்தும் கருத்துக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஐ. நா.விலுள்ள தீயசக்திகளின் முயற்சியினாலேயே தைவான் வெளியேற்றப்பட்டிருப்பதாக தைவானின் அதிபர் திரு. ஷியாங்கேஷேக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளையில் பொதுச் சபையின் இம்முடிவை சீனமக்கள் குடியரசின் பதில் உதவி வெளிநாட்டமைச்சர் வரவேற்றுள்ளார். இருந்தபொழுதிலும் சீன அரசாங்கம் இதுபற்றி முடிவான கருத்தெதையும் தெரிவிக்கவில்லை.

இதுபற்றி சீன பதில் உதவி வெளிநாட்டமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் கொள்கை வங்குரோத்துத்தனத்தை எடுத்துக்காட்டிவிட்டது. அது மட்டுமல்ல சீனமக்களுக்கு இது ஓர் பெருவெற்றியாகும் என்றார்.

ஐ. நா. பொதுச்சபை கடந்த 26 ஆண்டுகாலத்தில் இப்பொழுதுதான் முதல் தடவையாக இவ்வித செயலொன்றைச் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

யூனெஸ்கோவில் சேர்க்கப்படும்

ஐ. நா. சபையிலுள்ள யூனெஸ்கோ நிறுவனத்தில் சீனமக்கள் குடியரசைச் சேர்த்துக் கொள்வதுபற்றி ஆராயப்படுகிறது. சீனமக்கள் குடியரசை ஐ. நா.வில் சேர்த்துக் கொள்வதென்ற முடிவை அடுத்து யூனெஸ்கோ நிறுவனத்தில் சீனாவைச் சேர்ப்பது பற்றிய சாத்தியக் கூறுகளை ஆராயுமாறு நிறுவனத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மகிழ்ச்சி

சீனாவை ஐ. நா.வில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இந்தியா 1949-ம் ஆண்டிலிருந்தே வலியுறுத்தி வந்துள்ளது. இவ்விஷயத்தில் இந்தியாவுக்குக் கிடைத்த பெருவெற்றி இதுவாகும் என்று பிரேசிலில் இந்தியப் பிரதமர் திருமதி காந்தி தெரிவித்துள்ளார்.

யு.எஸ். தகவல் பகுதியின் புதிய நெறியாளர்

கொழும்பு, அக். 27

இலங்கையிலுள்ள அமெரிக்க தகவல் இலாகாவின் புதிய நெறியாளர் திரு. ஹோவார்ட் நசல், சனிக்கிழமையன்று மாலையில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கினார். இவர் தமது பாரியார் கதரீன், மகன் ஹோவார்ட், மகள் லோறெயின் சகிதம் வாஷிங்டனிலிருந்து இலங்கைக்கு நேரடியாக வந்தார். நசல் தம்பதிகள் வாஷிங்டனில் தங்கியிருக்கையில் பிரதமர் திருமதி. பண்டாரநாயக்காவைச் சந்தித்தனர்.

இலங்கையிலுள்ள அமெரிக்க தகவல் இலாகாவின் நெறியாளராகப் பணியாற்றிவிட்டு கடந்தமாதம் பின்லாந்திற்கு மாற்றலாகிச் சென்றுள்ள திரு விக்டர் ஸீடியரின் இடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் ஒரு பாக். அதிகாரி மாறினார்

கெய்ரோ, ஒக். 27

எகிப்தின் தலைநகரிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தைச் சேர்ந்த சான்சலர் திரு கரீம் தனது விசுவாசத்தை வங்காள தேசத்திற்குத் தெரிவித்துள்ளார். 31 வயதுடைய திரு கரீம் கெய்ரோவிலிருந்து லண்டன் போய்ச் சேர்ந்தார். தான் வங்காள தேசத்தின் விடுதலைப் படையுடன் சேர்ந்து கொள்ளப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பொழுது பாகிஸ்தானைச் சேர்ந்த 40 ராஜதந்திரிகள் கிழக்கு வங்காள தேச விடுதலைக்காக லண்டனிலிருந்து செயல்பட்டு வருவதாக அங்கு இயங்கிக் கொண்டிருக்கும் வங்காள தேச தூதரகம் அறிவித்துள்ளது.

---

17 பேர் பலி

புதுடில்லி, ஒக். 27

கிழக்கு வங்காளத்திலுள்ள சாலிபசாரில் நடைபெற்ற குண்டுவைப்புச் சம்பவத்தில் 17பேர் கொல்லப்பட்டதாகவும், மற்றும் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கோமில்லாப் பகுதியில் கொரில்லாக்கள் நடத்திய தாக்குதல்களில் பல [illegible] ஆதரவாளர்கள் கொல்லப்பட்டனர்.

பிரி. கருத்தரங்கில் இலங்கை அதிகாரி

லண்டன், அக். 27

இலங்கையின் பொது நிர்வாக, உள்ளூராட்சி உள்விவகார அமைச்சின் நிரந்தர காரியதரிசியான திரு வி. மகாதேவா, தற்போது பிரிட்டனில் நடைபெற்றுவரும் கருத்தரங்கொன்றில் பங்குபற்றி வருகிறார்.

ஒரு நாட்டு அரசாங்கத்தின் நிர்வாகத் துறையில் முக்கிய பெரும் மாற்றங்களைக் கொணர்ந்து அவற்றை அமுலாக்குவதில் உள்ள பிரச்சினைகளை திரு பி மகாதேவா உட்பட நாற்பது நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் கலந்தாலோசித்து வருகின்றனர். ஸஸெக்ஸ் சர்வகலாசாலையின் அபிவிருத்திக் கல்விகள் நிறுவனத்தில் நடைபெற்று வரும் இக் கருத்தரங்கை, ஐ. நா. பொது நிர்வாக அதிகாரம் ஒழுங்கு செய்திருக்கிறது.

கிரேக்க அரசு ராஜினாமா

ரோம், ஒக். 27

கிரேக்கநாட்டின் கூட்டரசாங்கம் இராஜினாமாச் செய்துள்ளது. கடந்த மூன்று வாரங்களுக்கு முன்புதான் கூட்டரசாங்கத்திற்கு அளித்து வந்த ஆதரவை நீதிக்கட்சி விலக்கிக் கொண்டது. கடந்த மார்ச் மாதம் தான் கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்து அரசு கைமாறியதென்பது குறிப்பிடத் தக்கது.

……

நேசமணிக்கு சிலை

சென்னை, அக். 27

கன்னியா குமரிப் பகுதியைத் தமிழ்நாட்டுடன் சேர்ப்பதற்காகப் போராடிய ஏ. நேசமணிக்கு நிலை எழுப்பப்படும் என்று தமிழ் நாடு முதல் அமைச்சர் திரு. மு. கருணாநிதி கூறினார்.

அண்ணா பிறந்தவிழாவொன்றில் பேசுகையில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இன்று திருநாள்

யாழ்ப்பாணம், வியாழன்

அர்ச் யூதாதேயுவினது திருநாள் இன்று இலங்கை பூராகவும் கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு கடந்த ஒன்பது தினங்களாக யாழ் அர்ச்சந்தியோகுமையோர் தேவாலயத்தில் விசேட ஆராதனைகளும் வழிபாடுகளும் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. இன்று விசேட பாடற் பூசையும் ஆராதனைகளும் இடம்பெறவுள்ளது.

'வைதீக சைவமரபு'

யாழ்ப்பாணம், வியாழன்

'வைதீக சைவமரபு என்ற ஒன்று சைவசமயத்திற்கு இருக்கின்றது. மரபு இல்லாவிட்டால் எல்லா சமயங்களும் ஒன்றுதான்.'

இவ்வாறு சைவபரிபாலன சபைச் செயற்குழுவினர் வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சபை ஆரம்பிக்கப்பட்ட 83 ஆண்டுகளில் அது ஆற்றிய பணிகள் பற்றிக் கூறும் இவ்வறிக்கையில் 'சைவமரபை உறுதியாகப் பின்பற்றி இன்னவாறுதான் சைவ சமயிகள் நடக்க வேண்டும் என எடுத்துக்காட்டும் ஸ்தாபனமே சைவபரிபாலன சபை' எனக் கூறப்பட்டுள்ளது.

போரைத்தவிர்க்க இயன்றதைச் செய்வோம்

— இந்திரா காந்தி

பிரேசில் ஒக். 27

இந்திய பாகிஸ்தான் எல்லையில் மிகவும் தீவிர நிலைமை இருந்து வருவதாகவும் இரு நாடுகளுக்குமிடையே போர் மூளுவதைத் தவிர்க்க இந்தியா தன்னாலான முயற்சிகளைச் செய்து வருவதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்.

பிரேசிலில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இதனை திருமதி காந்தி தெரிவித்தார்.

இப்பொழுது மேற்கொண்டிருக்கும் மேற்கு நாடுகளுக்கான பிரயாணத்தை நிறுத்தி பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தினால் அதனால் பயன் விளையுமல்லவா என்று பாகிஸ்தான் பத்திரிகை நிருபர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றிற்கு திருமதி காந்தி பதிலளிக்கையில், பேச்சுவார்த்தையில் நாம் என்றும் நம்பிக்கை உடையவர்களாகவே இருக்கிறோம். பேச்சுவார்த்தை மூலமே எப் பிரச்சினையையும் தீர்க்க முடியும் என நம்புகிறோம். இந்தியா பாகிஸ்தானுடன் போர்செய்யவோ பாகிஸ்தான் மக்களுடன் எவ்வித பகையும் எங்களுக்கு இல்லை. வங்காளதேச அகதிகள் பிரச்சினையில் எமது நாடு மிகவும் கஷ்டப்படுகிறது. இப்பொழுதைய பிரச்சினை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலானதல்ல.

கிழக்குவங்க மக்கள் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோருக்கும் பாகிஸ்தான் அரசுக்குமிடையேயுள்ள பிரச்சினையாகும் இது. இதனை அவர்களே பேசித் தீர்க்க வேண்டும் என்றார்.

கி. வங்க பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வு வேண்டும்

சோவியத்-கனடா பிரதமர்கள் அறிக்கை

ஒட்டாவா, ஒக். 27

கிழக்கு வங்காளப் பிரச்சினைக்கு விரைவில் ஓர் அரசியல்தீர்வு காணப்படவேண்டுமென்று கனடாவும் சோவியத் யூனியனும் கூட்டாக வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளன.

கனடாவுக்கு விஜயத்தை மேற்கொண்ட சோவியத் பிரதமர் திரு கொசிஜின் தனது விஜயத்தை முடித்துக்கொண்டு கனடாவை விட்டுப் புறப்படுவதற்குமுன்பாக இரு நாட்டுத் தலைவர்களும் கூட்டாகவிடுத்த கூட்டறிக்கையில் இவ்வேண்டு[illegible]ளது.

மேலும் அந்த கூட்டறிக்கையில், கிழக்கு வங்க மக்களின் உரிமையும், அவர்களின் நியாயமான நலன்களும் பாதுகாக்கப்படுவதோடு, இந்தியாவிலிருக்கும் அகதிகள் தமது தாயகம் திரும்புவதற்கான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட வேண்டும். இவ்விஷயத்தில் சம்பந்தப்பட்ட இருபகுதியினரும் நிதானமாக நடந்து கொள்ளவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஸ்ட்ரோ வரவேற்றார்

ஹவானா, ஒக். 27

கனடாவின் விஜயத்தை முடித்துக்கொண்ட சோவியத் பிரதமர் திரு. கொசிஜின் கியூபாவிற்குப் போய்ச் சேர்ந்தபொழுது கியூபா பிரதமர் டாக்டர் பிடல் காஸ்ட்ரோ நேரில் சென்று அவரை வரவேற்றார். இதற்குமுன்பாக காஸ்ட்ரோ கடும் சுகயீனமுற்றிருப்பதாக செய்திகள் வெளிவந்திருந்தன. ஆனால் திரு. காஸ்ட்ரோ சோவியத் பிரதமரை வரவேற்றபொழுது அவர் நோய்யுற்றிருந்தாரென்பதற்கான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை என நிருபர்கள் தெரிவித்துள்ளனர். அவர் நல்ல சுகத்துடன் இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

நாவலருக்கு முந்திய கல்வி முயற்சிகள் (2)

(வட்டுக்கோட்டை மூ. இராமலிங்கம்)

நாவலர் காலத்திற்குச் சிறிது முன்னர் உடுவில், அம்பலவாண முதலியார் குமாரர் உடுப்பிட்டி, அருளம்பல முதலியார் ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடத்தை உடுப்பிட்டியில் ஆரம்பித்து நடத்தி வந்ததை ஈழநாடு (2-4-1971) இதழில் எடுத்துக்காட்டி அப்பள்ளிக்கூடத்தைப் பற்றிய இரு செய்திகளை 1841-ம் ஆண்டு உதயதாரகை இதழ்களிலிருந்து பெயர்த்துத் தந்தோம்.

மூன்று வருடங்களின் பின்னர் குரோதி வருடம் ஆனி மாதம் 22-ந் தேதி (3-7-1844) புதன்கிழமையன்று ஒரு பரிசோதனை அப்பள்ளிக்கூடத்தில் நிகழ்ந்திருந்தது. அது பற்றி உதயதாரகை (27-6-1844) இதழில் இரு பாடல்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையும் கண்டு பெயர்த்துத் தருகின்றோம்.

(பதினென் சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

சீர்கொண்ட நிலமுதற் பொருளொரைந் தாய்ப்பரவு
    சின்மயசொ ரூபமானோன்
நிதிகொண்ட விணையடிக டொழுதிடும் பண்பரடி
    சிரமிசைக் கொண்ட தன்பர்
திருநதி குலத்தில் வருகுரிசிலம் பலவாண
    செல்வன் றவத்துதித்த
தார்கொண்ட குவளையணி யருளம் பலக்குரிசி
    லுதித்த கழகமதனிற்
றகைகொண்ட சிறுவர்க்கு விதிகொண்ட கலைகள்பல
    தவறறவு ணர்த்து நிபுணர்
தரைகொண்ட விசைமண்டு குரவரது திசெயுகந்
    தலைகொண்டு வரையுநிருபம்
நீர்கொண்ட புடவிக்க ணறிவதனின் முதியோர்க
    ணிலைகொண்ட வளவிலிதியோர்
நிறைகொண்ட வுள்ளத்த ரலகுல களித்தவொரு
    நிமலனைப் பரவுதுதியோர்
நிகரற்ற கலைபலவு ணர்ந்தமதி யோரெவரு
    நெடிதுவந் தினிதுகாண்க
சார்கொண்ட வுத்தமகு ரோதியாண் டானியிரு
    பத்திரண் டாந்தேதியிற்
பன்னுமித் தன்மைமழ கத்தினிற் கற்றுவரு
    பாலகர் படித்த கலையின்
பரீட்சைகா ணிவரும் படிமிகத் தாழ்மையொடு
    பன்முறையும் வேண்டினோமே.

பொழிப்புரை

சிறப்புப் பொருந்திய பிருதிவி முதலிய ஐந்தாய்ச் சொல்லப்படுகின்ற அறிவு வடிவமான கடவுளுடைய காத்தலைச் செய்கின்ற இரண்டு திருவடிகளையுந் தொழுகின்ற தன்மையினை யுடையவர்களுடைய பாதங்களைக் கொண்ட அன்பராகிய அழகிய கங்கா குலத்திற் பிறந்த பெருமையிற் சிறந்த அம்பலவாண முதலியாருடைய தவத்தினாற் பிறந்த, குவளை மாலையை யணிந்த அருளம்பல முதலியாரான பெருமையிற் சிறந்தோன் தாபித்த பாடசாலையிற் தகுதியைக் கொண்ட இளைஞர்களுக்கு விதிகளைக் கொண்டதாகிய கலைகள் பலவற்றைக் குற்றமற உணர்த்துகின்ற நிபுணர்கள் பூமியிற் பரந்த கீர்த்தி நிறைந்த ஆசிரியர்களுடைய பாதங்களைத் துதிசெய்து பயின்றோர் வரைகின்ற நிருபமாவது: கடல் சூழ்ந்த உலகத்தின் கண்ணே அறிவினால் முதியவர்களும் நிலைபெறுதலைக் கொண்ட அளவில்லாத செல்வத்தை உடையவர்களும், நடுவு நிலைமையைக் கொண்ட மனத்தையுடையவர்களும், உலகத்தைப் படைத்த ஒப்பற்ற கடவுளைத் துதிக்கின்றவர்களும் நிகரில்லாத கலைகள் பலவற்றையும் உணர்ந்த புத்தியையுடையவர்களுமாகிய இவர்கள் எல்லாரும் மகிழ்ச்சிகொண்டு இனிதாகக் காண்க. நிகழ்கின்ற குரோதிவருஷம் ஆனி 22-ந் தேதியில் (3-7-1844) சொல்லப்படுகின்ற இத்தரும வித்தியாசாலையிற் கற்றுவருகின்ற இளைஞர்கள் கற்ற கலைகளின் பரீட்சையைக் காணும் பொருட்டு மிகத் தாழ்மையோடு பலமுறையும் வேண்டிக்கொள்கின்றோம்.

விளக்கம்

இவ்வாசிரிய விருத்தம் ஒரு சீட்டுக்கவி. புலவர்கள் வழமையாகச் சீட்டுக்கவிகளைப் புலவருக்கோ, புண்ணிய சீலருக்கோ, புனைமுடி வேந்தருக்கோ எழுதியனுப்புவர். தம் பிரதாபங்களையும் சீட்டுக்குரியோர் பிரதாபங்களையும் திரட்டி விடுவர். நூலைந்து நாழிகையில் என்ற காளமேகத்தின் சீட்டுக்கவி, சிவசம்புப் புலவர் சீட்டுக்கவி (பிர. ப. திரட்டு பக். 126) பார்க்க. அப்பிரதாபம் ராஜகெம்பீர நடையிற்செல்லும் இந்தச் சீட்டுக் கவியோ ஒரு தனிரகமானது. இதை ஒரு புலவரனுப்பவில்லை. இயற்றியவர் ஒருபுலவரேதான். ஒரு தனிநபருமனுப்பவில்லை. ஒருவருக்கு மேற்பட்டோர் அனுப்புகிறார்கள். அவர்கள் சாதாரணப் பேர்வழிகளுமல்லர். நிபுணர்கள். அறிவைத் தத்தம் சிறிய தலைகளில் நிரப்பியதால் மாத்திரம் நிபுணர்களல்லர். சிறுவர்க்கு அதை விநியோகம் பண்ணுவதில் - தவறற விநியோகம் பண்ணுவதில் - சொல்லும் விதத்திலும் விடயத்திலும் கேட்போருள்ளத்திலும் தவறற— நிபுணர்கள்!

இவர்கள் கவிதையரங்கேற்றத்தையோ, பொன்னையோ, மணியையோ, பூந்துகிலையோ கருதி நிருபம் வரையவில்லை. இந்த நடையில் மிடுக்கும் துடுக்கும் மிளிரவில்லை. தயவும் பணிவும் தவழ்கின்றன. தாழ்மையோடு பன்முறையும் வேண்டுகிறார்கள். இத்தருணத்திலும் தத்தம் வித்தியா குரவரையும் மறக்கவில்லை அவர்களையும் முன்வைத்தே வேண்டுகோளை விடுக்கிறார்கள். இந்த வேண்டுகோள் கலைக்கழக- அருளம்பலக் குரிசில் தாபித்த கலைக்கழக நிபுணரின் வேண்டுகோள். அக்கழகத் தலைமையாசிரியர் மாத்திரம் இவ்வேண்டுகோளை விடுபாரல்லர். நிபுணர்கள் எல்லோரினதும் வேண்டுகோள். எல்லோரும் ஒற்றுமையான ஒரு குடும்பத்தினர்.

இந்த வேண்டுகோள் தனியொருவருக்கன்று. இரகசியமானதன்று. பகிரங்கமானது. பத்திரிகை வாயிலானது. அறிவின் முதியோருக்கு அளவில்லாத நிதியோருக்கு நிமலனைப் பரவு துதியோருக்கு, கலை பல உணர்ந்த மதியோருக்கு என்று பலருக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள். என்ன வேண்டுகோள்? அருளம்பலக் குரிசில் தாபித்த கழகப் பாலகர் படித்த கலைகளில் நடத்தப்படும் பரீட்சை காண வருமாறு விடுக்கும் வேண்டுகோள். பரீட்சைத் தேதி எது? குரோதி ஆண்டு ஆனி மாதம் 22-ந் தேதி (3-7 1844)

முதியோர், நிதியோர், துதியோர், மதியோர் ஆன பல திறத்தவரை அழைக்கும் நோக்கமென்ன? சமயவிர்த்திப் பிரசாரமா? இல்லவே இல்லை. பின் எதற்காக? பிறர் வந்து பார்ப்பதால் - பாராட்டுவதால் கழக மாணவருக்கு கழக நிபுணருக்கு ஒரு தனியுற்சாகம் பிறக்கும். மாணவர் மேலும் மேலும் ஊக்கமாகக் கற்பர். கழக நிபுணரும் ஊக்கமாகக் கற்பிப்பர். மிக முக்கியமான தின்னொன்று உண்டு. அழைக்கப்பட்ட பல்வேறு ரகத்தினரும் தத்தம் ஊர்தோறும் இதேபோற் கழகத்தை ஆரம்பித்து கலைத் தொண்டு சைவத் தமிழ்த் தொண்டு புரிவர் என்னும் பேரவாவே தலைதூக்கி நிற்கின்றது.

II

ஆசிரியப் பா

திருவள ருடுவைவாழ் சிரகு லம்பல
கதினன்ற பீற்ற மகிழுறச் சாலையி
0 ளாதி வகுப்பினி லாறுமா ணாக்க
ரோதுந் தமிழ்க்கலை யுரைத்திடிற் சூடா
மணிநிகண் டுரைதிரு வள்ளுவர் குறளொடு
நன்னூல் கணக்கு நாலடி தஞ்சை
வாணன் கோவை வைத்திய விளக்கம்
பூமி சாஸ்திரம் புலியூ ரந்தாதி
பழுதறு சீர்பெறு பாரதார்த் தம்பிற

விரண்டாம் வகுப்பினிற் இயன்றமா ணாக்கர்
மூவரோ துங்கலை முன்சொ னிகண்டு
மறைசையந் தாதி வைத்திய விளக்கம்
இலக்கணச் சுருக்க வினாவிடை குறளென்
நைடதார்த் தம்மென நவின்றுள பிறவு

மூன்றும் வகுப்பினின் மொழியுமா ணாக்கர்
நால்வர் பயில்வன நாலடி கணக்கு
முன்சொ னிகண்டுரை முத்துக் குமார
சாமியின் பிள்ளைத்தமிழ் சகலகலை வெண்பா
வைத்திய விளக்கம் வாசித்தல் பாரதம்

நாலாம் வகுப்பினி னுல்வர்கற் போரவர்
கற்பவை நிகண்டுரை கணக்குத் திருக்குறள்
வைத்திய விளக்கம் வள்ளுவ மாலை
வாணன் கோவைபொன் வண்ணத்தந் தாதி
நைடத மயிற்சியு நவிலுங் கலையே.

ஐந்தாம் வகுப்பினி x ஆறு மூன்றுமாம் கற்பவர் கற்பவை கணக்கு வைத்திய மண்டலப நிகண்டு மருதூரந் தாதி வாசித்த லிவை

மற்றவா றுவது வகுப்பின்மா ணாக்கரு மற்றதன் ஏழுமையே கற்பவை நிகண்டு கருவையந் தாதி வைத்திய

மேழாம் வகுப்பின்மா ணாக்கர் எண்மர்கூ டாமணி பெனுநிகண் டேதிரு வள்ளுவ மாலை வைத்திய மோதுவ

வெட்டாம் வகுப்பர் பன்னிருவரோ துங்கலை வைத்தியஞ் சூடா மணிநிகண் டாந்தி சூடிவெண் பாவிவை

சொன்ன வகுப்பிற் பதினைந்து பேரவர் படிப்பவை நாலடி மாக்கிசே ருந்திரு வள்ளுவ மாலையே பத்தாம் வகுப்பின் மாணவரின் னொருவர் வாசித்தல் நாலடி வள்ளுவர் குறளே

பதினொராம் வகுப்பவர் பன்னிரு பேரவர் வாசித்த லன்னெறி வள்ளுவர் குறளே

○துவாதச வகுப்பருந் துவாத சம்மே
அரிவரி பாரு மனர்கள் பதுவே.

* ஆதி வகுப்பு = கழகத்தின் அதியுயர்ந்த வகுப்பு
x ஆறு மூன்றுமாம் = 6 + 3 = 9.
○ துவாதச = பன்னிரண்டு.

அரிவரி வகுப்பு, அரிஓம் நம நன்றாக, குருவே துணை என்று எழுத்து முதலியன படிப்பதால் அரிவரி யாயிற்று.

(நாளை முடியும்)

"அன்பால் பராமரித்தார்"

யாழ்ப்பாணம், வியா

'செல்வி மேதர் ஒரு சிறந்த நிர்வாகி. இப்பாடசாலை முதல் முறையாக 1952-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை காலமும் தனது சிறந்த நிர்வாகத்தால் இதனை உன்னத நிலைக்கு உயர்த்திய பெருமை செல்வி மேதரைச் சாரும். இப்பாடசாலையில் இதுவரை காலமும் பயின்ற மாணவிகளை, அவர் அன்பால் பராமரித்ததை நாம் அனைவரும் மறக்க முடியாது'

இவ்வாறு திருநெல்வேலி பெண்கள் கிருஷிகப் பாடசாலையில் கடந்த 19 ஆண்டுகளாக அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற செல்வி வி. ஐ. எஸ். மேதருக்கு இப்பாடசாலையின் பழைய புதிய மாணவிகளால் அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில், வடமாகாணக் கிருஷிக இலாகாவின் பிரதம உத்தியோகஸ்தர் திரு. மாணிக்கவாசகர் கூறினார்.

வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி ஆறுமுகம், விவசாய இலாகா உத்தியோகஸ்தர் திரு. ஸ்ரீரங்கநாதன். கிருஷிப் பகுதி ஆராய்ச்சி [illegible] பாடசாலை விரிவுரையாளர் செல்வி எம். தம்பு, இப்பாடசாலையின் பழைய மாணவி திருமதி வைத்திலிங்கம் ஆகியோரும் செல்வி மேதரின் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

இவ்விழாவில் புதிய மாணவிகள், பழைய மாணவிகள், கிருஷிக இலாகா உத்தியோகஸ்தர்கள் உட்பட ஏராளமானோர் பங்கு பற்றினார்கள்.

(தே நி)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

தமிழ்நிகழ்ச்சிகள்

28-10-71 வியாழன்

(செய்திகள்: காலை 6-50, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 வாரசம்பவம், 7-15 திரைப்பாடல்கள். 7-30 குரல் வகை, 8-00 இசைவேளை, 8-15 இன்னிசைகீதம்.

இரவு 6-10 வாத்தியஇசை 6-15 ஓடிவிளையாடுபாப்பா, 6-30 நாதஸ்வரக் கச்சேரி, 7-00 தமிழ்மூலம் சிங்களம், 7-15 களமும்புலமும், 7.30 ஒலிமஞ்சரி, 7 45 ஐக்கியநாடுகள் சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 விஞ்ஞான சஞ்சிகை. 10-00 இசைநிகழ்ச்சி, 10-30 செய்தித்தொகுப்பு.

இன்றைய பலன்

(28-10-71)

செவ்வாய்க்கிழமை

மேஷம்: எதிர்பாராத இடத்திலிருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு. நண்பர்களின் உதவியும் அவசியம் உண்டு.

ரிஷபம்: அரசாங்க ஊழியர்களாயின் பதவி உயர்வுக்கு நடவடிக்கை எடுக்கப்படும். வீட்டிலும் அமைதி உண்டு.

மிதுனம்: கழுகுப்பார்வை செலுத்தியவர்கள் கை கொடுத்து உதவுவார்கள். அவசரச் செய்தியொன்று சிந்தனையைத் தூண்டும்.

கடகம்: காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும். பெற்றோர்களின் ஆதரவும் கிடைக்கும். தொழில் துறையிலும் வெற்றிடமுண்டு.

சிம்மம்: மேலதிகாரியின் கண்டிப்புக்கு இலக்காவீர்கள். முன் யோசனை விரும்பத்தக்கது.

கன்னி: விருந்தினர்கள் வருகையால் வீடே கலகலப்பாக இருக்கும். பெற்றோரைப் பேணவும்.

துலாம்: சிலருக்கு அரசினர் விருந்தும் கிடைக்கலாம். தொடர்புகளிலும் திருப்தியுண்டு. பெரியவருக்குச் சிறப்பான தினம்.

விருச்சிகம்: பெண்களாயின் மனக் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளவும். கண்காணிப்பு பலமாக இருக்கும்.

தனுசு: புதிதாக எதையும் ஆரம்பியாதிருப்பது நன்று. குடும்பத்தில் சந்தேகம் தலைதூக்காது பார்க்கவும்.

மகரம்: தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறு பிணிக்கு இடமுண்டு. பொறுமை நன்று.

கும்பம்: விருந்துபசாரத்திற்கு இடமுண்டு. புதிய நண்பர்கள் உறவாடுவதற்கு முன்வருவார்கள். இனிப்பான தினம்.

மீனம்: வைத்தியச் செலவுகளுக்கும் இடமுண்டு. இறை வழிபாடு நன்மை தரும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

மன்னாரில்

மரியாயின் சேனை பொருட்காட்சி

பேசாலை, புதன்

உலகில் மரியாயின் சேனை ஆரம்பமாகி ஐம்பது ஆண்டுகளின் நிறைவையொட்டிப் பொன்விழாப் பொருட்காட்சி ஒன்று இம்மாதம் 30, 31ந் திகதிகளில் மன்னார் புனித செபஸ்தியார் ஆலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இப்பொருட்காட்சியில் துறவற- இல்லற- அப்போஸ்தல அழைத்தல் பற்றிய அம்சம் பிரதான இடம்பெறும். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

பயிர்ச்செய்கைக் குழு நடவடிக்கை

வேலணை, புதன்

வேலணைப்பகுதியில் காலபோக நெற்பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கட்டாக்காலிகளின் தொல்லையைப் போக்கும் பொருட்டு வேலணைப் பயிர்ச்செய்கைக்குழு நடவடிக்கை எடுத்துவருகிறது.

இலவச ரயில் பிரயாண விபரம் ஆசிரியர்கள் தெரிவிக்கவேண்டும்

கல்விப்பகுதி சுற்றறிக்கை

உடுவில், புதன்

சம்பளமில்லா சலுகையான விடுமுறை புகைவண்டி ஆணைச்சீட்டுக்களின் பெறுமதியை அவ்வவ் ஊழியர் பெறும் மொத்தச் சம்பளத்துடன் சேர்த்து உழைக்கும் பொழுதே வருமான வரி அறவிட இருப்பதால் ஒவ்வொரு மாத முடிவிலும் தத்தமது பாடசாலை ஊழியர்களால் எடுக்கப்பட்ட இச் சீட்டு சம்பந்தமான விபரம் ஒன்று தமக்கு அனுப்பப்படவேண்டும் என வடமாநில கல்வித்திணைக்களம் எல்லா பாடசாலை தலைவர்களையும் சுற்றுநிருபம் மூலம் கேட்டுள்ளது.

இதன்படி ஊழியர் பெயர், ஆணைச்சீட்டுகள் வழங்கப்பட்ட குடும்பத்தினர் பெயர்கள் பிரயாண வகுப்பு மற்றும் வசதிகளைக் பிரயாண ஆரம்ப இறுதி இடங்கள், பிரயாணச்சீட்டு விபரங்கள் குறித்து ஒவ்வொருமாத முடிவிலும் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

'1.10.71 முதல் செயல்படுத்தப்படும் உழைக்கும் பொழுதே வருமான வரி செலுத்தும் திட்டத்துக்கு அமைய ஊழியர்களுக்கும் குடும்பத்தினர்களுக்கும் வழங்கப்படும் இலவச விடுமுறை புகைவண்டி ஆணைச்சீட்டுக்களின் பெறுமதியை அவ்வவ்வூழியர்கள் பெறும் மொத்தச் சம்பளத்துடன் சேர்த்து, அந்த மொத்தக் கட்டுத்தொகையிலேயே உடனே வரி அறவிடவேண்டும். ஒரு ஊழியருக்கோ அன்றி அவரது குடும்பத்தினருக்கோ வழங்கப்பட்ட விடுமுறைப்புகைவண்டி ஆணைச்சீட்டுக்களின் விபரம் கொண்ட மாதாந்த அறிக்கையை எல்லா பாடசாலைகளினதும் தலைவர்கள் சம்பளக்கிளைக்கு அனுப்பிவைக்க வேண்டும்' என்று அச்சுற்றுநிருபத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

எந்த நிறுவனத்தலைவரும் இந்த அறிக்கையை அனுப்பத்தவறும் பட்சத்தில் உரிய தொகையை அவர் கட்டுவதோடு மேலதிகமாக ஐந்து சதவீத குற்றமும் கட்ட நேரிடும் என்றும், தகவல் தவறானதென நிரூபிக்கப்பட்டால் குறித்த ஊழியர் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என்றும் சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பேசியது நானே!'

யாழ்ப்பாணம்' புதன்

'வடமாநில கல்வி அதிபர் எடுத்த நடவடிக்கை சரியானது திரு. அப்பாத்துரை' என்ற தலைப்பில் 25-10-71ந் திகதிய 'ஈழநாடு' பத்திரிகையில் ஜாதிக சங்கமய கட்ட நிகழ்ச்சியற்றிய செய்தியில் திரு. அப்பாத்துரை கூறியதாக வெளிவந்தகருத்துக்கள் எனது கருத்துக்களே. அக்கூட்டத்தில் இக் கருத்துக்களைத் தெரிவித்து நானே பேசியிருந்தேன்' என்று புங்குடுதீவு மகாவித்தியாலய உபஅதிபர் திரு. மு. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

சம முடிவு

யாழ்ப்பாணம், புதன்

வலிகாமம் மேற்குக் காரியாதிகாரி பிரிவில் உதைபந்தாட்டச் சாம்பியன் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்ற அராலிவடக்கு இல்வன்ராசர் கழகக் கோஷ்டிக்கும் யாழ் கல்வி போதனாநிலைய மாணவர் கோஷ்டிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி எத்தரப்பினருக்கும் வெற்றியின்றி சமமாக முடிந்தது. தொடக்கம் முதல் இறுதிவரை விறுவிறுப்பாக இருந்த இப்போட்டியில் இல்வன்ராசர் கழகம் முதலில் ஒருகோல் போட்டதாயினும் கல்வி போதனாநிலைய மாணவர் கோஷ்டி உற்சாகத்துடன் விளையாடி ஒருகோல் போட்டு ஆட்டத்தைச் சமனாக்கியது.

பதவி உயர்வு

யாழ்ப்பாணம், வியா

மதுபரிபாலன இலாகாவின் சங்கானைப் பிரிவுக்கான பிரதம இன்ஸ்பெக்டர் திரு வெ. கனகலிங்கம் இம்மாதம் தொடக்கம் வடபிரதேசப்பகுதி அத்தியட்சகராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். 35 வருடங்களின் முன் இவ்விலாகாவில் பாதுகாவலராகச் சேர்ந்து 50ம் ஆண்டு இன்ஸ்பெக்டராகப் பதவி உயர்வுபெற்ற இவருக்கு அரசாங்க சேவைக் கமிஷன் பிரதம இன்ஸ்பெக்டர் பதவி வழங்கியது. இவர் உரும்பராய் திரு. வே. கந்தையா தம்பதிகளின் புதல்வராவார்.

சோமலதா கொலை வழக்கு

"என் வீட்டிற்கருகில் 2-ம் எதிரியைக் கண்டேன்'

கண்டி, புதன்

"இரண்டாம் எதிரியான ரிச்சார்டை, ஜூன் 25-ம் திகதி எனது வீட்டிற்கு அருகில் கண்டேன். அவர் சேட் எதுவும் அணிந்திருக்கவில்லை"

சோமலதா கொலை வழக்கில் சாட்சியமளித்த 50வயதான ஆர். டி. என். சோநோனா மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு கண்டி மாஜிஸ்திரேட் திரு. எம். ஜி. பி. பெர்னாண்டோ முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 28வயதான சோமலதாவை கொலை செய்ய சதி செய்ததாக டபிள்யூ. டி. குலசிங்கா, டபிள்யூ டி. ரிச்சார்ட், கி. எம். ஜி. ஜெயவர்த்தனா, டபிள்யூ. டி. பிரேமதாச ஆகியோர் மீதும் 2ம், 3ம், 4ம் எதிரிகள் கொலை செய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

என். சோநோனா சாட்சியமளிக்கையில், தனக்கு எட்டு பிள்ளைகள் உண்டென்றும், சோமலதா இரண்டாவது மகளென்றும், பட்டதாரியான அவர் 71ம் ஆண்டு, பட்டதாரி பயிற்சியாளராக நியமனம் பெற்றாரென்றும், சாமினி ஜெயசிங்கா என்பவரை திருமணம் செய்ய முடிவுசெய்யப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது. எனது மகள் தினமும் வேலைக்கு பஸ்ஸில்தான் செல்வார். காலை 7-30 மணிக்கு வீட்டைவிட்டுப் புறப்படுவார். மாலை 5-30 மணிக்கு வேலையால் வீடுதிரும்புவார். மழை பெய்யும் சமயத்தில் கெதம்பையிலுள்ள நண்பர் வீட்டில் தங்கும்படி நான் தெரிவித்திருந்தேன். ஆனால் அவர் அங்கு தங்கவேயில்லை.

சம்பவம் நடந்த தினம் அவர் கைப்பையையும் குடையையும் கொண்டு சென்றார். கைப்பையில் சாப்பாட்டையும், மழைக் கோட்டையும் மற்றும் [illegible] கொண்டுசெல்வார் அவரது சாப்பாட்டையும் அவரே தயார்செய்வார்.

சம்பவம் நடந்த தினத்தன்று சாப்பாட்டை அவரே தயாரித்தார். அவர் தங்கச் சங்கிலியும், தோடும், கைமணியும் அணிந்துசெல்வார். ஜூன் 24ந் தேதி அவர் வீடு திரும்பவில்லை. அவரின் சடலம் ஜூன் 28ந் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. வீட்டிற்கு அழுதபடிவந்த என் மகன் சந்திரசிறி மூலம் இத்தகவலை அறிந்தேன்.

மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை நவம்பர் 1ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கோரிக்கை

வவுனியா, புதன்

சாளம்பைக்குளம் முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் தரத்தைக் குறைக்கும் நடவடிக்கையைக் கைவிடுமாறுகோரும் அவசரத்தந்தியொன்றை நடுச்செட்டிகுளம் இராமசகாயத் தலைவர் திரு பொ திருஞானசம்பந்தன் கல்வி அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளார். இவ்வித்தியாலயத்தின் தரத்தைக்குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

வவுனியா மாவட்டத்தில் அநேக முஸ்லிம் கிராமங்களின் மத்தியில் அமைந்துள்ள இம்முஸ்லிம் மகாவித்தியாலய விடுதிச்சாலையை சாளம்பைக்குளப் பொதுமக்களே தமது செலவில் அமைத்து உதவினர். அநேக முஸ்லிம், தமிழ்ப் பிள்ளைகள் இவ்விடுதியில் தங்கியிருந்து இவ்வித்தியாலயத்தில் கல்விபெறுகின்றனர்.

ஜீ. சி. ஈ. உயர்தர பாடத்திட்டத்தில் மாற்றம்

கோட்டை, புதன்

ஜி. சி. ஈ. உயர்தரபாடத்திட்டத்தில் பெரும் மாற்றம்செய்யப்படவிருக்கிறது.

இப்பரீட்சை பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையாக மட்டும் அமைவதோடு நில்லாது பல்வேறு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் புகுமுகப் பரீட்சையாகவும் அமைவதற்காகவே பாடத்திட்டத்தில் மேற்படி மாற்றம் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிகிறது.

இவற்றிற்கு மட்டுமன்றி எழுதுவினைஞர் நியமனங்கள் மற்றும் இதேபோல அரசாங்க நியமனங்கள் ஆகியவற்றிற்கும் பயன்படும்.

இதுவரை காலமும் இப்பரீட்சை பல்கலைப் புகுமுகப் பரீட்சையாகவே இருந்து வந்தது. ஆனால் ஏனைய தேவைகளுக்குப் பயன்படவில்லையென கல்விமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். வருங்காலத்தில் இப்பரீட்சையெழுதும் எல்லா மாணவர்களுக்கும் பயன்படத்தக்கவகையில் பாடத்திட்டம் மாற்றப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

- ✶ உறுதியானதும்
- ✶ நீடித்து உழைப்பதும்
- ✶ தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு - பித்தளை - மர ஸ்குறு
ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:

என்; வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனக தெரு, கொழும்பு-12
தொலைபேசி: 33143-4

கிளை: 188, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 580



குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய
குளிர்மையான
மறுமலர்ச்சி
மெட்டஹோன்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

மணிவாக்கு

நீண்டகாலம் வாழவேண்டும் என்பது அநேகமாக ஒவ்வொருவருடைய ஆசையுமாகும். ஆனால் நன்றாய் வாழவேண்டுமென விரும்புபவர் வெகு சிலரே. — ஹீஜின்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna.
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஐப்பசி மாதம் 11-ந் திகதி (28-10-71)

ஈழத்தில் உலக மகாநாடு

நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென ஏகமனதாக முடிவு செய்யப்பட்டிருப்பதால் அம்மகாநாட்டை சிறப்பாக நடத்த எல்லா ஏற்பாடுகளையும் யாழ்ப்பாண மகாநகரசபை செய்யவேண்டுமென்று ஏகமனதாக அச்சபையில் நிறைவேற்றியுள்ள தீர்மானம் இங்கு பொதுமக்களால் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படும்.

உதவிமேயர் திரு. துரைராஜசிங்கம் இத்தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசுகையில் உலகின் பல பாகங்களிலிருந்தும் தமிழ் அறிஞர்கள் இம்மகாநாட்டுக்கு வருவரென்றும் அவர்களை இங்கு வசதியாகத் தங்கி இருக்க மாநகரசபை எல்லா முன்னேற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தினார். சென்னையிலே இரண்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை நடத்திய தமிழ்நாடு அரசாங்கம் இவ்விஷயமாக பிரமாதமான ஏற்பாடுகள் செய்து வந்தவர்களின் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் அமோகமாகப் பெற்றதென்றும் அதைவிட ஒருபடி அதிகமாக யாழ். மாநகரசபை செய்து எல்லா விதங்களிலும் இம்மகாநாட்டுக்கு உதவ வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார். ஈழத்தமிழரும் சிறப்பாக யாழ்ப்பாண மக்கள் அனைவரும் இந்த யோசனையை உற்சாகத்துடன் ஆதரிப்பர்.

சற்றும் எதிர்பாராத முறையிலே ஈழத்தில் கலவரம் ஏற்பட்டு அவசரகாலநிலைமை பிரகடனம் செய்திருக்கிறது. இதனால் ஏற்கெனவே திட்டமிட்டதுபோல் இங்கு இம்மகாநாட்டை நடத்த முடியுமா என்ற ஐயப்பாடு இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்படுவது இயற்கை. நாட்டில் நெருக்கடி ஏற்பட்டிருக்கையில் பெரிய விழா நடத்துவது பலவிதங்களிலும் சரியல்லதான். தமிழ்நாடு அரசாங்கம் தனியே நடத்திய தமிழ்விழாவைப் போல் இங்கும் அந்த அளவில் நடத்துவதென்பது நினைக்கவும் முடியாத காரியம். ஆனாலும் இன்றைய சூழ்நிலையைக் கருதி பாரிஸில் நடைபெற்றதுபோல், ஆராய்ச்சி மகாநாட்டை மட்டும் இங்கு நடத்துவதும் பல நாடுகளிலிருந்தும் தமிழ் அறிஞர்களை அழைத்து அவர்களது பொன்னுரைகளைக் கேட்பதும் முடியக்கூடிய காரியமே. எக்காரணத்தைமுன்னிட்டும் இதை நிறுத்துவதாயின் அது நம்மக்களுக்குப் பெரும் ஏமாற்றமாவதுடன் ஈழத்தின் பெருமையையும் புகழையும் அது ஓங்கச்செய்ய முடியாது.

இதுகுறித்து இந்த ஸ்தாபன நிர்வாகிகள் இலங்கை அரசாங்கத்துடன் முன்கூட்டியே கலந்து பேசி மகாநாட்டின் மேலான நோக்கங்களை விளக்கினால் அரசாங்கம் இதற்கான அனுமதியளிப்பதுடன் கூடிய உதவிகளையும் செய்யுமென்பதே நமது நம்பிக்கை. திருகோணமலை முதலிய இடங்களில் தமிழ்விழாக்களை நடத்தி தமிழ் சமூகத்தின் நல்லெண்ணத்தைப் பெற முயலும் அரசாங்கம் உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாடு இங்கு நடைபெறுவதை ஆட்சேபிக்கும் என்று கருதக் காரணமில்லை. நல்ல காரியங்களுக்கு எப்போதும் சில சங்கடங்கள் இருக்கவே செய்யும். அதற்கு அஞ்சி அவற்றைக் கைவிடுவது எவ்விதத்திலும் நல்லதல்ல.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்த நம் ஈழத்தில் இந்த உலகத்தமிழ் மகாநாட்டை நடத்துவது பலவிதங்களிலும் பொருத்தமாகும். அவரது உருவத்துடன் கூடிய முத்திரையை வெளியிட்டு தமிழரின் அபிமானத்தைப் பெற முன்வந்துள்ள அரசாங்கம் உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடத்த எல்லாவிதத்திலும் ஒதுக்கி நிற்குமென்று நாம் கருதவில்லை. இதேசமயம் இதுவரை நடந்துள்ள மூன்று மகாநாடுகளிலும் ஒரு பெரிய குறையுண்டு. சைவத்துக்கும் தமிழிலுள்ள பக்தி இலக்கியங்களுக்கும் அம்மகாநாடுகளில் முக்கிய இடமளிக்கப்படவில்லை. அக்குறையை ஈழத்தில் நடைபெறும் மகாநாட்டில் நிறைசெய்து இம்மகாநாட்டை உலகமக்கள் அனைவருக்கும் பயன்படும்படியாக இறையருள் கூட்டுமென்றே நம்பிக்கையுடன் பிரார்த்திக்கின்றோம்.

சுழிபுரத்தில் புதிய ஒழுங்கை

சுழிபுரம் புதன்

சுழிபுரம் கிராமசபை முனாய்ப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் ஒரு புதிய சந்தையை ஆரம்பித்துள்ளனர். அதிகாலையில் கூடும் இச்சந்தையில் மீன் வகைகள் விற்பனைசெய்யப்படுகின்றன.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 5ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வெளிச்சம் வழங்க கோரிக்கை

குருநகர், புதன்

ஊர்காவற்றுறையிலிருந்து நாரந்தனை வேலணை ஊடாக புங்குடுதீவுவரை செல்லும் மின்சார இணைப்பிலிருந்து நாரந்தனைக் கிராமசபை எல்லைக்குள் வசிக்கும் மக்களுக்கும் பயன்படும் வகையில் இக்கிராம சபை எல்லைக்குள் பிரதான சந்திகளில் மின்விளக்குகள் பொருத்துமாறு நாரந்தனைப் பகுதி லங்கா சுதந்திரக் கட்சிக் கிளை சம்பந்தப்பட்ட அமைச்சைக் கோரியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 'பொன்மழை'

இதை எழுதுகையில் இங்கு நல்ல மழை பெய்கிறது. சென்ற நான்கு நாட்களாக யாழ்ப்பாணத்தில் மப்பும் மந்தாரமுமாக இருந்து, விட்டுவிட்டுப் பெய்யும்மழை பயிர்களுக்கும், மரம் செடிகளுக்கும், கமக்காரர்களுக்கும் வரப்பிரசாதமாகும்.

ஐப்பசியில் அடைமழை என்பர். கந்தசஷ்டியை ஒட்டி இப்போது பெய்யும் 'பொன்' மழையால் பலர் உள்ளமும் குளிர்ந்துள்ளது. பல மாதங்களாக மழையில்லையென்று வரட்சியால் ஏங்கியவர்களுக்கு, வானம் இந்தக் கருணை மழையைப் பொழிகின்றது. நம்மைக் கடவுள் கைவிடமாட்டார் என்பதற்கு இம்மழை நல்ல அத்தாட்சியல்லவா?

யாழ்ப்பாணம்மழையின்றி ஒரு பாலைவனமாகுமென்று வெளிநாட்டிலிருந்து வந்த சில 'நிபுணர்கள்' நம்மைப் பயமுறுத்தினர். அது உண்மையாகுமோவென்று நம்மிற்சிலர் பயந்தோம். நல்லவேளையாக அப்படி எதுவும் நடந்துவிடவில்லை. நிபுணர்கள் எனப்படுவோரின் பேச்சை நம்புவதைவிட, கடவுளை நம்பி பிற உயிர்களுக்கு இம்சையின்றி வாழ்ந்தால், நமக்கு தீங்குவருமா? மலைபோல் வந்ததும் பனிபோல் நீங்குமல்லவா?

0 0 0

உலகப்புகழ்பெற்ற ஓவியரான பிக்காஸோ என்பவர் தெற்கு பிரான்ஸிலே சென்ற திங்களன்று தமது 90-வது ஜயந்தியை அமைதியாகத் தம் மனைவியாருடன் கழித்தார்.

தேநீர் அருந்தும் வேளையைத் தவிர மற்ற நேரமெல்லாம் தம் கணவனுர் ஓயாமல் ஓவியக்கலையில் ஈடுபட்டுள்ளதாக மனைவியார் கூறுகின்றார். ஸ்பெயின் தேசத்தில் பிறந்த இக்கலைஞர் பிரான்ஸில் குடியேறி, தம் கலை மூலம் பிரான்ஸின் புகழை ஓங்கவைக்கின்றார்.

இதுவரை அவர் 13000க்கு மேலான சித்திரங்கள் எழுதியுள்ளாராம். உலகப்புகழ் பெற்ற அவரது ஓவியங்கள் அடங்கிய ஒரு கண்காட்சியை பிரெஞ்சுத்தலைவர் திறந்து வைத்துள்ளதாகவும் நீண்ட க்யூவரிசையில் மக்கள்சென்று பார்ப்பதாகவும் தெரிகிறது. அவரது சில ஓவியங்கள் லட்சக்கணக்கான பவுண் பெறுமதியுள்ளதாம்.

இதைக் கேட்டதும் இங்கு நாம் நமது கலைஞர்களை எப்படி நடத்துகிறோம் என்பது தான் ஞாபகம் வந்தது. நம் கலைஞர்களில் மக்களை மகிழ்வித்தவர்கள், வயோதிபத்தில் உணவுக்கும் வழியின்றி பிச்சைக்காரர்களாக தவிப்பவர்கள் பலருண்டு. இது எவ்வளவு பெரிய பாவம்!

ஐயாறன் எழுதுவது

அரசாங்கமும் சமூகமும் இதைக்கவனித்து நமது கலைஞர்களில் யாரும் இவ்விதம் சங்கடப்படாமல் பார்த்துக் கொள்வார்களா?

0 0 0

ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்களையெல்லாம் சுட்டுத்தள்ளவேண்டுமென்றும் அவர்களால் நாட்டுக்கு வீண் பளுவேயன்றி நன்மையில்லையென்றும் இங்கு சிலர் கூறுகிறார்களாம்! அவர்கள் கையில் மட்டும் அதிகாரமிருப்பின், பிகாஸோ, ராஜாஜி முதலியவர்களையும் தங்கள் பெற்றோர்களையும் கூட சுட்டுத்தள்ளிவிடுப்பார்கள்! நல்லவேளை அப்படியான நிலைமை எந்த நாட்டிலும் ஏற்படவில்லை.

இன்று வாலிபர்களாக இருப்பவர்களும் ஒரு நாள் 55 வயதடைவார்களல்லவா! வயதானவர்களும் மற்றவர்களுக்கு இம்சையின்றி கூடிய மட்டிலும் உதவியாக அன்புடன் வாழ்ந்தால், அவர்களது அறிவும் அனுபவமும் மற்றவர்களுக்கு வாழ்க்கையில் நல்ல வழிகாட்டியாகவும் ஆறுதலாகவும் இருக்கும். இன்றேல்...

0 0 0

சாத்திரமும் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டென்செய்வீர்
பாத்திரஞ் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளுமாற்பேறரே.
— அப்பர் அடிகள்

[சாத்திரங்கள் பலவற்றைப் பேசும் தீயவர்களே! கோத்திரம் குலம் முதலியவற்றைக்கொண்டு என்ன செய்வீர். வணங்குதற்குரிய பொருள் சிவ பரம்பொருள் என்று கொண்டு பணிவீராயின். திருமாற்பேற்று இறைவர் ஒரு மாத்திரைப்பொழுதுக்குள் அருளுவார்.]

ஆறுவயதுத் திட்டம்

ஏழைப்பிள்ளைகள் கஷ்டப்படுவார்கள்

கோட்டை, புதன்

ஆரம்ப வகுப்பில் பிள்ளைகளை ஆறுவயதிற்குப் பின் சேர்க்கும் திட்டத்தினல் செல்வந்தர்களின் பிள்ளைகள் மட்டுமே பயனடைவார்கள். ஏழைப்பிள்ளைகள் இதனால் பெரும் கஷ்டப்படுவார்கள்

பட்டதாரி ஆசிரியர் சங்க செயற்குழு நவம்பர் மாதம் 7-ந் திகதி கூடும்போது மேற்கண்ட தீர்மானம் பற்றி ஆராய்வார்கள்

6 வயதுத் திட்டம் அமுல் செய்யப்படுமுன்னர் 6 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கான ஒரு திட்டத்தை வகுக்கவேண்டுமெனக் கமிட்டி வலியுறுத்தவிருக்கிறது.

அரசாங்கம் 6 வயதுத் திட்டத்தை அமுல் நடத்த முன்னர் 6 வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் நிலைமை பற்றி விளக்க வேண்டுமென சங்கம் கருத்து தெரிவித்துள்ளது.

1972 ஜனவரியில் ஒரு பிள்ளைக்கு 5 வயதும் 10 மாதமுமாக இருந்தால், அப்பிள்ளை பாடசாலையில்சேர 7 வயதுவரை காத்திருக்க வேண்டும் என்றும் வசதியுள்ள பெற்றோர்கள் இப்படிப்பட்ட தங்கள் பிள்ளைகளை தனிப்பட்ட பாலர் வகுப்பிற்கு அனுப்புவார்களென்றும் ஏழைப்பெற்றோர்கள் இப்படிப்பட்ட பிள்ளைகளை ஒருவருட காலம் வீட்டில் வைத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படுமென்றும் சங்கத்தினர் கருத்து தெரிவித்தனர்.

'கலாச்சாரத்தைப் பேணிக் காக்கும் கல்லூரி'

யாழ்ப்பாணம், வியாழன்

"ஆங்கில மொழிமூலக் கல்விப் போதனை அளித்து வந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உடை மற்றும் விஷயங்களிலும் ஆங்கிலேய முறைகளையே ஆரம்பகாலத் தொடக்கம் இன்றுவரை கைக்கொண்டுவந்த போதிலும், அது தன் பாரம்பரிய கலாச்சாரத்தில் சிறிதும் வழுவாதிருந்து வருவது யாவராலும் பாராட்டப்படவேண்டியதொன்று. தொடக்ககாலத்திலிருந்து இன்றுவரை விடுதியிலும் மற்றும் விருந்துவைபவங்களிலும் உணவு விஷயத்தில் தமிழர் பாரம்பரிய கலாச்சாரத்திற்குச் சிறிதும் ஊறு ஏற்படாவண்ணம் இக்கல்லூரி கடைப்பிடித்து வரும் கொள்கை போற்றப்பட வேண்டியதாகும்."

மேற்கண்டவாறு வடபகுதி பிரதம கல்வி அதிகாரி திரு. சந்திரசேகரம்பிள்ளை யாழ். இந்துக்கல்லூரி உயர்வகுப்பு மாணவர்மன்ற இராப்போசன விருந்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இக்கல்லூரி இலங்கையிலேயே அதி சிறந்த கல்லூரியாகத் திகழ்வதாகவும் இது [illegible]களிலும் கல்வி அளிப்பதில் முதன்மை பெற்று விளங்குவதாகவும் திரு. சந்திரசேகரம்பிள்ளை கூறினார்.

இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக்கிளை மனேஜர் திரு. நவரத்தினம் இவ்விருந்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஆங்கில மொழியின் முக்கியத்துவம் பற்றி விளக்கி அதன் தேவையையும் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

மன்றத்தலைவர் பிரதாபன் பேசுகையில், இக்கல்லூரி விஞ்ஞான ஆய்வுகூடக்கட்டிடத்திற்கு அத்திபாரம் போடப்பட்டுப் பலகாலமாகியும் இதுவரைகட்டிடம் அத்திபார அளவிலேயே இருந்துவருவதாயும் தொகுதி எம்.பி. இதனை நிறைவேற்றி உதவவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

தி. வே. யோகநாதன் பேசுகையில், பல்கலைக்கழகத்திற்குப் பிரதேச அடிப்படையில் மாணவர்களைத் தெரிவுசெய்யும் திட்டத்தைக் கண்டித்துப் பேசினார். ஏற்கனவே தரப்படுத்தலின்மூலம் கஷ்டமுற்றிருக்கும் எமக்கு இத்திட்டம் மேலும் கஷ்டம் தருவதொன்றாகும் என அவர் சொன்னார்

[illegible] ஜயவேல் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

ஞாபகார்த்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம விற்பனையை ஆரம்பித்து வைப்பார். அதனைத் தொடர்ந்து மற்றையோர் முத்திரை வாங்குவார்கள்.

நண்பகல் 11 மணிக்கு மானிப்பாய் அஞ்சல் அலுவலகத்தில் ஆனந்த குமாரசுவாமி ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்படும். நண்பகல் 11 மணிக்கு அங்கு உடுவில் எம்பி திரு. தர்மலிங்கம் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகும்.

உடுவில் எம். பி; திரு. எஸ் இராசேந்திரம், ஆனந்த குமாரசுவாமிசபை செயலாளர் திரு வி. என். துரைராஜா, அரசாங்க அதிபர், தபால் அமைச்சர் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

யாழ்ப்பாண அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சகரிடமிருந்து தபால் அமைச்சர் ஒரு முத்திரையை வாங்குவதன் மூலம் விற்பனையை ஆரம்பித்து வைப்பார். அதன்பின் மற்றையோர்கள் முத்திரைகளை வாங்குவார்கள்.